**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 220/2020 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.6 |
| Name : | ராமசாமி |
| Father's Name/Husband Name: | சோமசுந்தரம் |
| Village : | கொளப்பாடி |
| Taluk : | குன்னம் |
| Age : | 55/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 06.05.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரி சின்னதுரை ஆஜர் )**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 செல்வியை எனக்கு தெரியும். அ.சா.1க்கும் எதிரிக்கும் பாதை சம்மந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது. சம்பவத்தன்று கூட்டமாக இருந்தது போய் பார்த்தேன். வேறு ஒன்றும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1க்கும் எதிரிக்கும் நிலம் சம்மந்தமாக சிவில் வழக்கு நடைபெற்று வருகிறது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். கடந்த 24.03.2020ம் தேதி காலை 7.30 மணியளவில் வீட்டிற்கு வெளியே சத்தம் கேட்டது என்றும் நான் வெளியே சென்று பார்த்த போது ஆஜர் எதிரி அ.சா.1யை கெட்ட வார்த்தையால் திட்டி கம்பியால் அ.சா.1ன் வலது தொடையில் அடித்து வயிற்றின் மீது ஏறி மிதித்து

கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டியதை நான் பார்த்தேன் என்ற போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்காக பறிந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.